DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

STC-332/2024

Prosecution witness – PW 5

| | | |
|---|---|---|
| Name | : திரு.ஆனந்த் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused present.)

19.05.2026 – 11.15 AM

முதல் விசாரணை:–

1. நான் தற்போது இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் எழும்பு முறிவு சிகிச்சை நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 08.11.2024 அன்று சித்தார்த் ஆர்த்தோ மருத்துவமனையில் பணியில் இருந்தபோது 60 வயது மதிக்கத்தக்க விஜயா எனும் பெண் அவரது வலது காலில் காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு மதியம் 12.30 மணிக்கு வந்தார். அவரை அவரது உறவுக்கார பெண்மணியான கே.எண்.சத்யா எனும் நபர் அழைத்து வந்தார். நான் பரிசோதித்த போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரிடம்விசாரித்த போது அவர் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் அன்றைய தினமே முதலுதவி சிகிச்சை பெற்று மேல்சிகிச்சைக்காக வந்திருப்பதாக தெரிவித்தார்.

2. அவரை நான் பரிசோதித்த போது அவருக்கு வலது காலில் 10 x 5 x 2 செ.மீ அளவில் உள்புறம் சிதைந்த காயம் காணப்பட்டது. மேலும் சதை நார்களும் கிழிந்ததிருந்தன. அவரிடம் மேற்படி காயம் எவ்வாறு ஏற்பட்டது என்று கேட்ட போது அவர் அடையாளம் தெரியாது ஒரு பேருந்து வேகமாக வந்து தனது காலில் ஏறி இறங்கியதால் இந்த காயம் ஏற்பட்டதாகவும் அதற்காக ஏற்கனவே இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருப்பதாகவும், அதனால் விபத்து பதிவேடு எதுவும் புதியதாக பதிவு செய்ய

வேண்டாம் என என்னிடம் கூறினார். அவரை அன்றைய தினமே உள்நோயாளியாக அனுமதித்து அறுவை சிகிச்சை செய்து 11.12.2024 ம்தேதி அன்று மாலை 04.00 மணிக்கு மருத்துவ விடுவிப்பு செய்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.3 ஆகு குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. போலீசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார் என்று எனக்கு நினைவில் இல்லை. நான் தற்போது நீதிமன்ற சாட்சியத்தில் கூறியதைதான் போலீசாரிடம் கூறியது தான் என நினைவில் இல்லை. அ.சா.1 கடந்த 08.11.2024ம் தேதியன்று மருத்துவமனைக்கு வந்தார். அ.சா.1 மருத்துவமனைக்கு வந்த போது இராமநாதபுரம் அரசு மருத்துவனையில் சிகிச்சை பெற்ற ஆவணங்களை கொண்டு வரவில்லை என்றால் சரிதான். அ.சா.1க்கு வலது காலில் பாதத்திற்கு நடுவில் உட்புறமாக சதை சிதைவு ஏற்பட்டிருந்தது. அ.சா.1 கூறியபடி அவருக்கு காலின் மேற்பகுதியில் பேருந்தின் டயர் ஏறி இறங்கியிருந்தால் அவருக்கு வெளிப்புறமாக காலின் மேற்பகுதியில் சதை சிதைவும், எலும்பு முறிவும் ஏற்பட வாய்புள்ளதா என்றால் உள்ளது.

2. அ.சா.1 கூட்ட நெரிசலில் சென்று நிலைதடுமாறி கீழே விழுந்து அவரை காப்பாற்றும் நோக்கில் 4,5 நபர்கள் சேர்ந்து அவரை இழுக்கும் போதும், மேற்படி நான் கூறிய காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். அ.சா.1 தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றால் அவர் விபத்துக்கா இழப்பீட்டை அதிகமாக பெறலாம் என எங்கள் மருத்துவனையில் சிகிச்சை பெற்றால் என்றும், அவருக்கு ஆதரவாக முகாந்திரம் இன்றி அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன் என்றாலும் சரியல்ல.

ஓம்/G.தங்ககார்த்திகா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ)
கடலாடி